# பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைப்போம்;



**தொ**ண்மை வாய்ந்த காஞ்சிபுரத்தில் பிறந்து, பள்ளிப் படிப்பை காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளியில் பயின்று, உயர் படிப்பையும் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சிறப்பாக Honors பயின்று பட்டதாரி ஆனவர்.

தன் சிற்றன்னையால் ஆளாக்கப்பட்டு - படிப்பின் மீது மிகுந்த பிடிப்பும், படிப்பு மட்டுமே தன்னை உயர்த்தும் என்ற தளராத நம்பிக்கையும் - தான் கொண்ட கொள்கையில் பிடிப்பும், உறுதியும் - தனது காந்த குரலால் வாதங்களை முன்வைக்கும் முறையில் புதுமையை புகுத்தி மக்களை தன்வயப்படுத்தி - தனது எழுத்தால் உயர்ந்து - கலை இலக்கிய ஈடுபாட்டால் அதிலும் புரட்சியை புகுத்தி - தன் வாழ்நாளில் தான் கண்டதும், கொண்டதும் ஒரே தலைவர் தந்தை பெரியார்தான், என்று ஏற்றுக்கொண்டு - பெரியாரின் சமூக நலக் கொள்கையை தன் வழியில் தொடர தனி இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கியவர் பேரறிஞர் அண்ணா.

17/09/1949 அன்று மாலை சென்னை இராயபுரம் இராபின்சன் பூங்காத் திடலில் தி.மு.க துவக்க விழாவில், அறிஞர் அண்ணா கழகத்தின் நோக்கங்களையும், கோட்பாடுகளையும் விளக்கி உரையாற்றினார். அவரது பேச்சின் முக்கியப் பகுதி பின்வருமாறு " திராவிட முன்னேற்றக் கழகம், நமது தாய் கழகமான திராவிடர் கழகத்திற்கு போட்டிக் கழகமல்ல, பயனிப்பது அதே கொள்கைப் பாதையில்தான்; திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான், திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கொள்கைகளில், கருத்துக்களில், மாறுதல், மோதுதல் எதுவும் கிடையாது. சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சீர்திருத்தம், சமதர்மக் குறிக்கோள், அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியதினின்று விடுதலை - ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும். பாசீசத்தையும், பழமையையும், நாட்டைப் பாழ்படுத்தும் சக்திகளையும் எதிர்த்து போராடுவோம்".

அறிஞர் அண்ணாவின் கொள்கை முழக்கத்தில் அவர் அதிமுக்கியமாக கருதியது மாநில சுயாட்சியும், தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவதும், இந்தி மொழித் திணிப்பை எதிர்ப்பதாகும்.

இந்திய உப கண்டத்தின் ஓர் பகுதியான தமிழ்நாட்டிலிருந்து இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இருந்து எழுந்த முழக்கம் "திராவிட நாடு திராவிடற்கே" என்பதாகும், அக்குரலை பிரிட்டிஷார் ஏற்க மறுத்தனர், சுதந்திரத்திற்கு பின்னர் ஆட்சியமைத்த காங்கிரஸாரும் திராவிட இயக்கத்தின் கோரிக்கைகளுக்கு செவி மடுக்கவில்லை, மாறாக ஒன்றிய காங்கிரஸ் அரசு பல விதமாக நெருக்கடிகளை கொடுத்தது, பிரிவினைவாத தடை சட்டத்தை இயற்றி கழகத்தை ஒழிக்க நினைத்தது, அதிலிருந்து சமயோசிதமாக சிந்தித்து " வீடு இருந்தால்தான் ஓட்டை மாற்றமுடியும் " என்ற உவமையை கழகத்தவரிடம் எடுத்துரைத்து கழகம் திராவிட நாடு கோரிக்கையை கைவிடுகிறது, ஆனால் கோரிக்கைகளுக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று கூறி கழகத்தை அறிஞர் அண்ணா காப்பாற்றினார், அத்தருனத்தில் அவர் கைப்பட எழுதிய "எண்ணித் துணிக கருமம்" என்ற அண்ணாவின் கையெழுத்து பிரதிகளை பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்து சமீபத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூலாக அச்சிட்டு வெளியிட்டார்.

திராவிட நாடு கொள்கையை கைவிட்டு விட்ட பின்னர் 1963 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25 ஆம் நாளில் பிரிவினைத் தடை மசோதாவிற்கான அரசியல் சட்டத் திருத்தத்தினை எதிர்த்து மாநிலங்களவையில் அறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்திய வரலாற்றுப் புகழ் பெற்ற பேருரையில்,

"...நாம் ஒரு கூட்டாட்சியமைப்பை (Federal form) ஏற்றிருக்கிறோம். அரசமைப்பை உருவாக்கியவர்கள், ஒற்றையாட்சி அமைப்புக் (Unitary Form) கூடாது; கூட்டாட்சியமைப்பு முறை தான் வேண்டுமென்று விரும்பினார்கள். ஏனெனில், அரசியல் த்த்துவ ஞானிகள் பலர் சுட்டிக் காட்டிய யுள்ளபடி, இந்தியா மிகப் பரந்து கிடக்கின்றது"

உண்மையில் இந்தியாவை ஒரு துணைக் கண்டம் என அழைக்க கூடிய அளவிற்கு அது அமர்ந்து விரிந்து கிடக்கின்றது. எஃகால் செய்த வரைச் சட்டத்தை போல் வலிவான ஓர் ஒற்றாயாட்சியமைப்பை ஏற்க முடியாது அளவிற்கு, இந்நாடு மாறுபட்ட மரபுகளையும், வேறுபட்ட வரலாற்றுகளையும், பல திறப்பட்ட மனோ பாவங்களையும் கொண்டுள்ளது. நமது கூட்டாட்சி அமைப்பின் நடைமுறை, மாநிலங்களை மேலும், மேலும் விரக்தியடையச் செய்துள்ளது என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். நமது அரசியல் சட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் - மறு ஆய்வும் செய்யப்பட வேண்டும் - இதனை ஒன்றிய அரசு உணர வேண்டும் - என்பதே மாநிலங்களின் கோரிக்கைகளாகும்.

எனவே நமது அரசியலமைப்பு சட்டத்தின் கூட்டாட்சி முறையிலுள்ள பல ஒற்றை தன்மைகளை எதிர்த்துப் போரிடுகின்ற ஒரு தாக்குதல் முன்னனியாகவே நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ( Spearhead ) ஆக கருதிக் கொள்ள வேண்டுகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

திராவிட நாடு கோரிக்கையை கைவிட்ட பின்னர் அம்முழுக்கம் மாநில தன்னுரிமை முழுக்கமாக உருமாறி மாநில சுயாட்சியாக கோரிக்கையாக மலர்ந்தது.

1967-68 நிதி நிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து விட்டு அறிஞர் அண்ணா ஆற்றிய உரையின் ஒரு பகுதியில் மாநில உரிமையை பற்றி உரையாற்றியுள்ளார் அதனை இங்கே பதிவிடுகிறேன்;

" திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்கு காரணமே இங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும், மாநிலங்களிடையே சமநிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான், ஒன்றிய அரசிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்க கூடாது என்பதற்காகக் கேட்டோம், மாநில அரசுகள் பல அதிகாரங்களை பல துறைகளிலும் பெற வேண்டும் என்பதற்காக தன்னாட்சி உரிமையை கேட்கிறோம். பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக கேட்கிறோம். இந்தி எதிர்ப்பை எந்த நிலையிலும் விட்டு விட மாட்டோம், இந்தி திணிப்பிலிருந்து தற்காத்து கொள்ள மாநில சுயாட்சி பெற்று தமிழை இந்தியாவின் ஆட்சி மொழியாக மாற்றுவோம். திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டுவிட்டோம் என்று அறிவித்தோமே தவிர, தன்னாட்சி கோரிக்கையை இந்திய யூனியனின் ஒரு அங்கமாக இருந்து பெற்று விடலாம் என்று நம்பிக்கையோடு இருக்கிறோம், மாநில சுயாட்சியைப் பெற அரசியல் சட்டத்தின் அடிப்படை பிரிவுகளிலே திருத்தங்கள் வேண்டும் என்பதற்காக வாதாடுகிறோம்" என்று தெள்ளத் தெளிவாக குறிப்பிடுகிறார்.

ஒன்றிய அரசு என்பது ஏதோ பேரரசு போலவும் மாநில அரசுகள் உதவிக் கேட்டு நிற்கும் சிற்றரசு போலவும் காணப்படுவது குடியரசு தத்துவத்தை கேலிக்குள்ளாக்குகிறது, ஒன்றிய அரசிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது பாதுகாப்பான வளர்ச்சி யைச் சாத்தியமாக்க இன்றிமையாதது.

01/08/1948 திராவிட நாடு இதழில் அறிஞர் அண்ணா எழுதிய "இந்தி எந்த வடிவத்தில் வந்தாலும் எதிர்ப்போம்" என்ற கட்டுரையில் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1938 ஆம் ஆண்டு மூதறிஞர் இராசகோபாலாச்சாரியார் இந்தியை தமிழ்நாட்டில் கட்டாயப் பாடமாக்க முனைந்த போது, அவர் இந்நாட்டுக்கு பொது மொழி வேண்டுமென்று கூறப்படும் காரணத்துக்கு முதலிடம் அளிக்கவில்லை. அவர், இந்தியாவின் பழைய நாகரீகம் சமஸ்கிருத்ததிலேயே அடங்கி இருக்கிறதென்றும், சமஸ்கிருதப் படிப்பை அசட்டை செய்யக் கூடாதென்றும், சமஸ்கிருதத்தின் மறுவடிவமே இந்தியென்றும், ஆகையால், அதனை எல்லோரும் கட்டாயம் படிக்க வேண்டும்மென்றுமே கூறி இந்தியை இங்குக் கட்டாயம் பாடமாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் தமிழ் மக்களின் இந்தி எதிர்ப்பு போராட்டம் அந்த முயற்சியை அப்பொழுதே முறியடித்துவிட்டது. பள்ளிகளில் இந்த இந்தி கட்டாயமாகக் கற்பிக்கப்படும் திட்டத்தை நீக்கி சென்னை அரசு 1940 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் நாள் ஆணை பிறப்பித்தது.

ஆங்கிலயே அரசு இந்தியாவிற்கு சுதந்திரம் தந்து நாட்டை விட்டு வெளியேறினாலும் தொடர்ந்து வந்த காங்கிரஸ் ஒன்றிய அரசு இந்தி திணிப்பை முயல்கிறது இந்நிலையில் பண்டிதர் நேரு அவர்கள் சமஸ்கிருதம் கலந்த இந்தியை ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ள இயலாது என்று தெளிவாகவும், திட்டவட்டமாகவும் விளக்கி விட்டார். இந்தி பரப்பப்படுவதில் உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உண்மையை வெளிப்படுத்தியதற்காக நாம் அவரைப் பாராட்டுகிறோம். அவரைப் பாராட்டுகிறோம் என்றவுடனே சிலர் சமஸ்கிருதம் கலக்காத இந்தியை ஏற்றுக் கொள்வீர்களா என்று வினவுகின்றனர், இந்தி எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற திட்டமான முடிவு இதனால் ஒரு போதும் சிதைந்து விடாது, சிதைந்து விடவும் முடியாது என்று தெளிவாக அண்ணா விளக்கியுள்ளார்.

இந்திமொழிதிணிப்பைஎதிர்த்துவெறும்தீர்மானங்களை இயற்றினால் மட்டும் போதாது என்று 21/09/1957ல் திருவண்ணாமலையில் சுவாமி அருணகிரிநாதர் தலைமையில் நடந்த இந்தி எதிர்ப்புப் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா தன் பேச்சில் தெரிவித்திருப்பது.

"இந்த மாநாட்டில் இந்தியை எதிர்ப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றியது எதற்காக என்றால், 1937 இந்தி எதிர்ப்பு போரட்டக்களத்தை போன்று மீண்டும் ஓர் போர்களத்திற்கு சந்திப்பதற்கு கழகமும் அதன் தோழர்களும் தயார் என்பதை உலகிற்கு தெரிவிப்பதற்கே அன்றி தமிழ்மொழியின் வளத்தை, இலக்கிய தரத்தை அறிந்து கொள்வதற்காக அல்ல என்ற பொருள்படும் படி போர் முரசு கொட்டினார்" கழகம் கண்ட நம் பேரறிஞர் அண்ணா.

ஆக நாம் 1937 ஆண்டு முதல் தமிழ்மொழியை பாதுகாக்க நடைபெற்ற போராட்டக் களங்களை பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தந்தை பெரியாரின் தன்மான இயக்கமும், தீவிரமான இந்தி எதிர்ப்பும் இல்லாமல் இருந்திருந்தால், தென்னகத்தை சார்ந்த மக்களின் மொழி உரிமைகள் அரசியல் அமைப்பு உருவான நாட்களிலேயே முழுமையாக பறிபோயிருக்கும். 1938 போராட்டத்தின் போது இளவயது தோழர்களான தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோர் தமிழ்மொழி காக்கும் போராட்டத்தில் மறியலில் ஈடுபட்டதால் கைதாகி சிறையில் நோய்வாய்ப்பட்டு தன்னுயிரை ஈந்தனர்.

ஆட்சிமொழித் தீர்மானத்தின் மீது அண்ணா மாநிலங்களவையில் பேசுகையில் பின் வருமாறு பதிவிட்டுள்ளார்.




சி.சேரன்
தலைமை செயற்குழு உறுப்பினர்,
செயலர் இனமானப் பேராசிரியர் நற்றமிழத் தொண்டகம்.


அண்ணா பேசுகிறார்;

"பொது மொழி ஒன்றின் மூலம் இந்தியாவை ஒன்றுபடுத்த விரும்புகிறீர்களா; அல்லது ஒரே விதமாக்க முயலுகிறீர்களா? இதில் தெளிவு வேண்டும். இந்தியா முழுவதையும் ஒரே மட்டமாக்கி விடுவதுதான் உங்கள் முயற்சி என்றால், இப்போதே கூறுகிறேன் - இந்த முயற்சியில் நீங்கள் துளிகூட வெற்றி பெறப்போவதில்லை.

இந்தி பேசுகிற பகுதியில் பிறந்து வளரும் குழந்தைகள் தாயின் மடியிலேயே இந்தி மொழிப் பயற்சியை கற்றுக் கொண்டு விடுகிறார்கள். இந்தி பேசும் பகுதியினருக்கு பரம்பரை சொத்தாக வருவது, எங்களுக்குப் பள்ளிக்கூடத்துக்கு அறிவாக கிடைக்க வேண்டும், ஒத்த முறையில் இதில் எப்படிப் போட்டியிட முடியும்? உங்களுடைய மொழியை நாங்கள் படித்து உங்களுடன் நாங்கள் எப்படிப் போட்டிபோட முடியும்? அது பெரிய அநீதி - சித்திரவதை!

உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழி என்னுடைய தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கிருக்கிறது! நீண்ட வரலாற்றையும் புகழ்மிக்க பொற்காலங்களையும் உடைய மொழி. கவிஞர் யாத்த மொழி. கவிதைகள் கொஞ்சும் மொழி. கருத்தாலும் கவினுறு வளத்தாலும் கடலெனப் பரந்து கிடக்கும் மொழி - எங்கள் உயிருடன் கலந்த மொழி - அந்த தமிழ் மொழி மற்றெதற்கும் தாழாத வகையில் ஆட்சிமொழி என்ற தகுதி தரப்படும் வரை, நான் அமைதி பெற மாட்டேன் - திருப்தி அடைய மாட்டேன்!"

அண்ணா உட்பட தென்னகத்தை சார்ந்த உறுப்பினர்கள் அனைவரின் எதிர்ப்பையும் மீறி ஆட்சி மொழிகள் சட்டம் ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாளில் 1963 உருவாயிற்று. அச்சட்ட மசோதாவின்படி 26/10/1965 முதல் இந்தியே ஆட்சிமொழியாகிவிடும்; ஆனால் ஆங்கிலமும் இந்தியுடன் கூடுதல் மொழியாக பயன்படுத்தலாம் என்ற பொருளையே அச்சட்டத்தில் பயனபடுத்தப்பட்ட " MAY " என்ற சொல் சுட்டிக் காட்டிற்று. ஆங்கிலம் ஆட்சிமொழியாக தொடரந்து நீடிக்கும் என்று அச்சட்ட மசோதா அறுதியிட்டு உறுதியாக சொல்லவில்லை.

" இந்தி பேசா மாநில மக்கள் எத்துணைக்காலம் விரும்புகிறார்களோ, அதுவரை ஆங்கிலம் இணை மொழியாக இருக்கும் " என 1959 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் பண்டிதர் நேருவால் தரப்பட்ட உறுதிமொழியும் அச்சட்டத்தில் தெளிவாக இடம் பெறவில்லை. இதன் மூலம் ஆட்சி மொழி என்ற தகுதியை பெயரளவில் பெற்றிருந்த இந்தி, 1965 ஆம் ஆண்டு ஜனவரி முதல் உண்மையாகவே இந்திய ஆட்சி மொழியாகிவிட்டது, ஆங்கிலம் கூடுதல் இணை மொழியானது. இதனால் தமிழக மக்களும், மாணவர்களும் தன்னெழ்ச்சியாக பெரும் போராட்டத்தை தொடங்கினர். அண்ணா உட்பட கழகத்தவர் ஆயிரக்கணக்கில் கைதாகினர், அமைதியாக நடைபெற்ற போராட்டத்தை தமிழக போலீஸாரோடு, துணை இராணுவப் படையும் இணைந்து இரும்பு கரம் கொண்டு அடக்க முயன்றதால் வன்முறை வெடித்தது, துப்பாக்கி சூட்டில் நூற்றுக்கணக்கானவர் மாண்டனர். பல்வேறு தமிழ்நாட்டு இளைஞர்கள் தனலில் எரிந்து தமிழ்மொழி காக்கும் போராட்டத்தில் தங்களை மாய்த்துக் கொண்டனர். இறுதியாக மக்களின் போராட்டம் வெற்றி பெற்றது, இந்தி பேசாத மாநில மக்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தி திணிக்கப்ப்படமாட்டாது என்றும் ஆங்கிலமே தொடர் மொழியாக நீடிக்கும் என்று காங்கிரஸ் உள்துறை மந்தரி அறிவித்தார், அதனையொட்டி இந்தி எதிர்ப்பு போராட்டம் 12/02/1965 ல் ஓய்ந்தது.

அண்ணா அடிக்கடி சுட்டும் சமுத்துவம் என்பது எல்லோரையும் சமமாக நடத்துவது அல்ல; எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிப்பது எனும் அறிஞர் லாஸ்கியின் கூற்றே அவர் முன்னிறுத்த விரும்பிய தேசத்தின் ஆன்மாவாக இருந்தது. அறிஞர் அண்ணாவின் முதன்மையான அரசியல் இலட்சியமான மாநில சுயாட்சியைப் பற்றி, அண்ணா அவர்கள் தெளிவாக்குகிறார். தமிழக மக்களின் உயர்விற்காகவும் பொருளாதார வளமைக்காகவும், அரசியலில் சமுத்துவ தகுதிக்காகவும், மொழி - இன - பண்பாட்டு உறுதிக்காகவும், இந்தி திணிப்பு எதிர்ப்பிற்கும் தங்களது நெஞ்சில் ஏந்தி அதற்காக கழகத்தவர் தங்களது உழைப்பை நல்க வேண்டும்.

அண்ணா அடிக்கடி சுட்டும் சமுத்துவம் என்பது எல்லோரையும் சமமாக நடத்துவது அல்ல; எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிப்பது எனும் அறிஞர் லாஸ்கியின் கூற்றே அவர் முன்னிறுத்த விரும்பிய தேசத்தின் ஆன்மாவாக இருந்தது.

1969 பிப்ரவரித் திங்களில் அண்ணா தமிழகத்தை சோகக் கடலில் ஆழ்த்திவிட்டு மறைந்த போது வானொலி மூலம் கலைஞர் அண்ணாவுக்கு படைத்த கவிதாஞ்சலியில்,

"இயற்கையின் சதி எமக்கு தெரியும் அண்ணா.. நீ
இருக்குமிடந் தேடி யான்வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா,
நான் வரும்போது கையோடு கொணர்ந்து - அஃதை
உன் கால்மலரில் வைப்பேன் அண்ணா.."

எனக்கேட்டுப் பெற்ற, அண்ணா கடைப்பிடித்த அணுகுமுறைகளை இயன்றவரை கடைப்பிடித்து, தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு வலுவான அடித்தளம் அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அண்ணா அவர்கள், எந்தச் சாமானியன் உயர வேண்டும்; தமிழும், - தமிழ்ப் பண்பாடும் மீண்டும் தரணியில் மேன்மை பெற வேண்டும்; தமிழகத்தின் தொழில் வளம் சிறக்க வேண்டும்; தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டு பாடுபட்டார்களோ, அவற்றையெல்லாம் அடைந்திட வேண்டும் எனும் உணர்வோடு தொண்டாற்றி கழகத்தவரின் துணையோடு பாடுபட்டு அண்ணாவின் கனவுகளை நனவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அண்ணா அவர்கள் மறைந்த போது அவர் விட்டுச் சென்ற ஆட்சியையும், அவர் உருவாக்கித் தந்த கழகத்தையும், அவர் விட்டுச் சென்ற ஆட்சியையும் - இடையிடையே சுயநல வெறியோடு சிலர் இழைத்த துரோகங்களும், சூழ்ச்சிகளும் துளைத்தெடுத்தபோதும் அவற்றால் துவண்டுவிடாமல் காத்து - 'நெருக்கடி நிலை' என்னும் நெருப்புச் சூறாவளி சுற்றிச் சுழன்று வீசிச் சுட்டுப் பொசுக்கிய போதும் கழகமும் ஆட்சியும் கருகிவிடாமல் அவற்றைக் கட்டிக்காத்து, முன்னைய நாளினும் வலிமையுடதாய் - வனப்புடையதாய் இந்தியத் திருநாட்டில் ஜனநாயக மாண்புகள் காப்பதில் இப்படியொரு பேரியக்கமா? என எல்லோரும் வியக்கும் வண்ணம் இந்த இயக்கத்தை வளர்ந்து இன்று அது செழித்து வளம்பெருக்கி ஆட்சிச் சக்கரத்தின் துணையோடு தமிழ் மக்களுக்குப் பயனளித்து வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை தொடர்ந்து கழகத்தின் தலைவராகவும், திராவிட மாடல் அரசின் முதல்வராகவும் விளங்கும் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதல்வர்களில் முதல்வராக விளங்கு கிறார். தமிழ் நலன், தமிழர் நலன், தமிழ்நாட்டின் நலனிலும், எல்லோருக்கு எல்லாமும் என்ற அறிஞர் அண்ணாவின் வழி நின்று கழகத்தையும், ஆட்சியையும் பாங்குற நடத்துகிறார். அண்ணா காலத்தில் "வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது"என்றிருந்த நிலைமை மாறி "வடக்கு வழங்குகிறது; தெற்கு தேறுகிறது" என்று கூறும் அளவுக்குத் தமிழகம் பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில் ஒன்றிய அரசை ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் அரசியல் இயக்கமான பிஜேபி அரசு நடத்தி வருகிறது.

ஒற்றை நாடு கலாச்சாரத்தை நோக்கி நாட்டை நடத்தி வருகிறது, இயன்றளவு எதிர்க்கட்சிகள் ஆட்சியில் இருக்கும் மாநிலத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவது, நிதி பகிர்வில் பாரபட்சம் காட்டுவது, மாநில உரிமைகளை பறிப்பது அல்லது தலையிடுவது, ஆளுநர்களின் துணை கொண்டு கொல்லைப்புறமாக ஆட்சியை கைப்பற்ற நினைப்பது போன்ற பலவித ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டு வருகிறது. ஆனால் பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மாற்றுச் சிந்தனை மற்றும் திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்கு ஒவ்வாத இந்துத்துவ சிந்தனைகளை திணிக்க முயலும் ஒன்றிய அரசோடு எந்தவித சமரசமும் செய்து கொள்ளாமால், இயக்கமும் அதன் கொள்கைகளும் பெரிது என்று அசராமல் பாடுபட்டு வருகிறார் நம் தலைவர் ஸ்டாலின், அவருக்கு துணையாக களமாடுகிறார் இளந் தலைவர் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள். நெருப்பாற்றில் நீந்தி கழகத்தை மேலும் வலிவுடனும், பொலிவுடனும், கழகத்தின் நூற்றாண்டை நோக்கி இட்டுச் செல்லும் பணியில் அவர்களோடு சேர்ந்து பயணிப்போம்.

தனது வாழ்நாளின் இறுதியில் 1969 காஞ்சி இதழ் பொங்கல் மலரில் தனது கடைசி ஆசையை அண்ணாவின் உயில் என்றழைக்கப்படுகிறது;

"...மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்களை பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் எனபது பற்றி, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகிறேன். இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி உள்ளது என்பதிலே எனக்குத் தனியான தோர் மகிழ்ச்சி; நமது கழகம் மட்டுமின்றி வேறு பல அரசியல் கட்சிகளும் கட்சி சாராத அறிவாளர் பலரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றனர். "

அறிஞர் அண்ணா வாழ்ந்த காலத்தில் நம்மில் பலர் வாழவில்லை. அறிஞர் அண்ணாவின் சுவாசக் காற்றை சுவாசிக்க நம்மில் பலருக்கு வாய்ப்பும் கிட்டவில்லை. ஆனாலும் தாய்மொழித் தமிழ் உணர்வை ஊட்டிய பேரறிஞர் அண்ணாவுக்கு எங்கள் நன்றிகள். தாய் மொழியாம் தமிழை காக்கும் உன்னத உணர்வை எங்களுக்கு ஊட்டிய பேரறிஞர் அண்ணாவை போற்றுவோம்.

இன்று மட்டுமல்லாமல், இனி வருங்காலத்திலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் தமிழும், தமிழரும், தமிழகமும், மேலும் மேலும் மேன்மைகள் பெறத் தொடர்ந்து தொய்வின்றி உழைப்போம் என அண்ணாவின் பெயர்சொல்லி உறுதியேற்போமாக!

**அண்ணாவின் புகழ் ஓங்குக!**
**வெல்க திராவிட முன்னேற்றக் கழகம்!**
**வெல்க திராவிட மாடல் அரசின் நாயகர்!**



கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் அவர்களை பொறியாளர் அணியின் மாநில துணைச் செயலாளரும் கடலூர்,விழுப்புரம், புதுச்சேரி மண்டல பொறுப்பாளருமான முனைவர்.சிபிரதீப் சந்தித்து வாழ்த்து பெற்றார்.மேலும் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகரம்,ஒன்றிய நகர,பேரூர் அளவில் பொறியாளர் அணி நிர்வாகிகள் தேர்வுக்கு நேர்காணல் நடத்தி நியமனம் செய்ய சம்பந்தமாக கலந்து ஆலோசிக்கப்பட்டது.

முதல்வர் உத்தரவின் பேரில் - சிவகங்கை அருகே சோழபுரத்தில்

## கல்லூரி மாணவிகள் வசதிக்காக , கல்லூரி வாயிலில் பேருந்துகள் நின்று செல்கின்றன!

### மாணவிகள் மகிழ்ச்சி! முதல்வருக்கு நன்றி!

*சிவகங்கை. பிப். 3 -*

கடந்த மாதம் 21, 22 தேதிகளில் தமிழக முதல்வர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

22ஆம் தேதி காரைக்குடியிலிருந்து கார் மூலமாக சிவகங்கைக்கு அரசு நிகழ்ச்சிக்கு வருகை தந்தார். வழியில் சிவகங்கை தாலுகா சோழபுரம் புனித ஜஸ்டின் கலை அறிவியல் கல்லூரி மற்றும் சாந்தா ஆசிரியர் பயிற்சி கல்லூரி மாணவிகள் முதல்வரை வரவேற்பதற்காக கல்லூரி வாயிலில் கூடியிருந்தார்கள். மாணவிகள் நிற்பதை கண்டதும் முதல்வர் காரை நிறுத்தி மாணவிகளிடம் நலம் விசாரித்தார். மாணவிகள் முதல்வருக்கு வரவேற்பு அளித்தார்கள். தொடர்ந்து நன்றாக படிக்குமாறு முதல்வர் மாணவிகளுக்கு அறிவுரை கூறினார் .

அப்பொழுது மாணவிகள் தாங்கள் வெளியூர்களிலிருந்து பேருந்தில் கல்லூரிக்கு வருகிறோம். சோழபுரத்தில் இறங்கிஇரண்டு கிலோமீட்டர் தூரம் நடந்து கல்லூரிக்கு வருகிறோம். இதனால் சிரமம் ஏற்படுவ தாகவும் தங்களுக்கு கல்லூரி முன்பாக பேருந்து நிறுத்தம் அமைந்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்று கோரிக்கை விடுத்தார்கள்.

மாணவிகளின் கோரிக்கையை ஏற்ற முதல்வர் அங்கு அனைத்து பேருந்துகள் நின்று செல்லுமாறு உத்தரவிட்டார் .அவரது உத்திரவின் பேரில் அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் பேருந்து நிறுத்தம் அறிவிப்பு பலகையை வைத்தார்கள் . அதன்படி 22ஆம் தேதி முதல் அனைத்து அரசு மற்றும் தனியார் பேருந்துகள் நின்று செல்கின்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் வலை தளம் வாட்ஸ் அப் பில் சோழபுரத்தில் பெண்கள் கல்லூரியில் பேருந்துகள் நிற்பதில்லை என்று உண்மைக்கு புறமான செய்தி வெளியிடப்பட்டது. இது குறித்து கல்லூரி முதல்வர் பிருந்தா மாணவிகள் மேனகா, மீனாட்சி, சோமசுந்தரம் ஆகியோர் இங்கு தினசரி பேருந்துகள் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் நிற்பதால் மாணவிகள் வருகிறார்கள். வாட்ஸ் அப், வலை தளங்களில் வந்த செய்தி உண்மை கிடையாது. முதல் வர் உத்திரவின் படி 22ம் தேதி முதல் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் நின்று செல்கின்றது.

இதற்காக பேருந்து நிழற்குடை ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. எனவே பேருந்து நிற்கவில்லை என்ற செய்தி தவறானதாகும் என்று கூறினார்கள். மேலும் நேற்று முன்தினம் 30,ம்தேதி மாவட்ட அளவிலான அறிவியல் இக்கல்லூரி யில் நடைபெற்றது.

இந்த கண்காட்சிக்காக மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து பங்கேற்ற மாணவிகள் கல்லூரி வாசலில் பேருந்து நின்று சென்றதினால் கண்காட்சியில் பங்கேற்றனர். என்றும் கூறினார்கள்.

இது குறித்து கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் அரசு போக்குவரத்து கழக பொது மேலாளிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சோழபுரம் கல்லூரி யில் பேருந்து நின்று செல்வதை கண்காணிக்குமாறு அறிவுரை கூறினார் .

போக்குவரத்துதுறை சிவசங்கர் அவர்களும் இங்கு பேருந்து நின்று செல்வதை ஆய்வுசெய்திடுமாறு உத்திரவிட்டுள்ளார். கல்லூரி முதல்வர் மற்றும் மாணவிகள் முதல்வர் தங்களின் கோரிக்கையை நிறைவேற்றிய தற்காக வும், பேருந்து நிறுத்தம் நிழற்குடை கட்டுவதற்கு உத்திரவிட்டதற்காக மகிழ்ச்சியுடன் நன்றியை தெரிவித்தார்கள்.

---

தலைவர் - முதல்வர் தலைமையில் அமைதிப் பேரணி!

## சேப்பாக்கம் பகுதிக் கழகத்தினர் பங்கேற்பு!

### பகுதிச் செயலாளர் எஸ்.மதன் மோகன் அறிக்கை!

*சென்னை,பிப். 3 -*

சேப்பாக்கம் பகுதி செயலாளர் எஸ்.மதன்மோகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இது குறித்து தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு நாளை (3.2.2025 -திங்கள்கிழமை) காலை 7மணிக்கு காமராஜர் சாலையில் பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

முன்னதாக கழகத் தலைவர்- முதல்வர் அவர்கள் தலைமையில் வாலாஜா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலையில் இருந்து அமைதிப் பேரணி புறப்படுகிறது.

எனவே இந்த அமைதிப் பேரணியில் நமது சேப்பாக்கம் பகுதியில் உள்ள மாவட ட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள். கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் - மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.